### தமிழ், மண், மொழி, மானம் காக்க!

# "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தில் அனைவரும் சேர வேண்டும்!

## கோவையில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேட்டி!




கோவை, ஜூலை 4-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண், மொழி, மானம் காக்க முன்னெடுத்துள்ள "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தில் அனைவரும் சேர வேண்டும் என்று கோவையில் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் கூறினார்.

மண், மொழி, மானம் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற முன்னெடுப்பை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று தொடங்கி வைத்திருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களையும் குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 11 லட்சத்து 58,000 குடும்பங்களையும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ஒவ்வொரு குடும்பங்கள் வாரியாக நேரிலே சென்று சந்தித்து ஒன்றிய பிஜேபி அரசால் தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை எடுத்துச் சொல்லியும், தமிழ்நாட்டிற்கு வழங்கக்கூடிய நிதியை ஒன்றிய அரசு தொடர்ந்து வழங்காமல் மறுத்து வருவதையும், கீழடி உள்ளிட்ட நம்முடைய தொன்மைகளை வெளியிடுவதற்கு காலம் தாழ்த்துவதும், மறுப்பதும் நீட் தேர்வு உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களுக்கு எதிராக செயல்படக்கூடிய சூழ்நிலைகளையும், இந்த 4 ஆண்டுகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் நாட்டு மக்களுக்கு செய்திட்ட பல்வேறு சாதனைத் திட்டங்களையும் குறிப்பாக கோவை மாவட்டத்தில் இந்த 4 ஆண்டுகளில் 2021 சட்டமன்றத் தேர்தலில் கோவையில் 10 தொகுதிகளும் எதிர்க்கட்சிகள் வென்றிருந்தாலும் கூட 234 தொகுதிகளுக்கும் சட்டமன்ற உறுப்பினராக முதலமைச்சர் அவர்களே முன்னின்று கோவை மாவட்டத்திற்கு வழங்கியிருக்கக் கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களை வீடு, வீடாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து எடுத்துச் சொல்லி "ஓரணியில் தமிழ்நாடு" என்ற நம் கழகத் தலைவருடைய முன்னெடுப்பை இல்லம் தோறும் கொண்டு சென்று சேர்ப்பதற்கான பணிகளை தலைவருடைய உத்தரவின் அடிப்படையில் நேற்று 3ம் தேதி காலை 8.00 மணிக்கு இந்த 10 சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 3,117 பூத்துகளிலும் பூத் வாரியாக எங்கள் இயக்கத்தை சார்ந்த (BLA 2) பூத்திலுடைய தகவல் தொழில்நுட்பணியை சார்ந்திருக்கக்கூடிய பூத் டிஜிட்டல் ஏஜென்ட், பூத் இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வீடு, வீடாக சென்று மண், மானம், மொழி காப்பதற்காக இந்த பணிகளை முன்னெடுத்துள்ளோம். மிகச் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய உரிமைகளை மீட்பதற்கு முதலமைச்சர் அவர்கள் எடுக்கக்கூடிய அந்த முன்னெடுப்பு என்பது இந்தியாவில் உள்ள முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக ஒரு நெஞ்சுரத்தோடு. ஒரு ஆளுமை மிக்க முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய உரிமைகளை காத்து வருகின்றார்கள்.

**அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம்!**

முதலமைச்சர் எடுக்கக்கூடிய முன்னெடுப்புக்கு தமிழ்நாடு முழுவதும் இது ஏதோ திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய உறுப்பினர் சேர்க்கை என்று இல்லாமல் "ஓரணியில் தமிழ்நாடு" அனைத்து குடும்பங்களும் தமிழ்நாட்டில் ஓரணியில் நிற்கிறது. நம் மீது தாக்கப்படுகின்ற இந்த தாக்குதல்களை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு நம் உரிமைகளை, நம்முடைய மண், மொழி, மானத்தை காக்கக்கூடிய வகையில் ஒன்றிணைந்து செயல்படுவதற்காக ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு மகத்தான பணியாக முதலமைச்சர் அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பை தொடங்கி வைத்திருக்கின்றார்கள். எனவே ஒன்றிய பிஜேபி அரசு தமிழ்நாட்டிற்கு செய்கின்ற, தமிழக மக்களுக்கு செய்கின்ற துரோகங்களை நாட்டு மக்களிடத்திலே தோலுரித்து காட்டி, பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும் கூட முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அயராது உழைப்பால் இந்தியாவில் அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு சென்று ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருமையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

3ம் தேதி காலை 8.00 மணிக்கு 3,117 வாக்குச் சாவடிகளிலும் எங்களுடைய கழக நிர்வாகிகள் அவரவர் பூத்திற்கு சென்று வீடு வாரியாக வாக்காளர்களை சந்தித்து புதிய உறுப்பினர் சேர்க்கை "ஓரணியில் தமிழ்நாட்டிற்கான முன்னெடுப்பை தொடங்கி இருக்கின்றோம். மிகச் சிறப்பாக இந்த பணிகளை முன்னெடுத்து உள்ளோம். கோவை மாவட்டத்தில் 31 லட்சத்து 85,000 பேர் வாக்காளர்களாக இருக்கின்றார்கள். குறைந்தபட்சம் 10 லட்சத்திற்கு மேற்பட்டோரை கோவை மாவட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தில் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கான இலக்கை நிர்ணயித்து தலைவருடைய கரங்களில் முழுமையாக இந்த பணிகளை நிறைவு செய்து வெற்றிகரமாக ஒப்படைக்கக்கூடிய பணிகளை தொடங்கி இருக்கின்றோம்.

**கேள்வி** : சட்டமன்ற பிரச்சினை, திருப்புவனம் காவலர் தாக்கப்பட்டு இருக்கிறது, இதையெல்லாம் திசை திருப்புவதற்காக தான் மொழிப் பிரச்சினை, கீழடி விவகாரம், தொகுதி பரிசீலனை இது போன்ற பிரச்சனைகளை வந்து தி.மு.க. செஞ்சுட்டு இருக்காங்க.

மொழி பிரச்சனை இல்லை. இந்தி திணிப்பு இல்லைன்னு நீங்க சொல்றீங்களா. கீழடி பிரச்சனை வந்து அதை அவங்க ஒத்துக்கிட்டு வெளியிட்டு இருந்தா நாங்க ஏன் அந்த கருத்தை சொல்ல போறோம். நம்முடைய வரலாறுகளை மறைப்பதற்கு ஒன்றிய அரசு முயற்சி செய்கிறது. அதனுடைய கருத்தை வெளியிட மறுக்கிறது. அதை சொல்லணுமா. வேண்டாமா அரசினுடைய கடமையா. ஒரு இயக்கத்தினுடைய கடமையா, இல்லையா, இதுக்கும், அதுக்கும் என்ன சம்பந்தம்ன்னு கேட்கிறேன் நான்.

தூத்துக்குடியில் துப்பாக்கி சூடு சம்பவம் நடக்கலையா, அந்த மாதிரி ஏதாவது தொலைக்காட்சி பார்த்துதான் தெரிஞ்சுகிட்டேன் ஒரு முதலமைச்சர் அப்ப இருந்தவர் சொன்னாரு, அந்த மாதிரியா இந்த அரசாங்கம் இருக்கு, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குறாங்க, தவறுகள் நடந்தா உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய முதலமைச்சர். தவறுகள் இல்லைன்னு சொல்லல நாங்க, நடந்தா உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துறோம், நடக்காம பார்த்துக்கிறோம். அதனால எதையும் எதை மறைக்கிறதுக்கு இன்னொரு கருத்துக்களை முன்னெடுக்க வேண்டிய அவசியம் இல்லை, நீட் தேர்வுங்கிறது வேண்டாம்ன்னு மக்களுடைய கருத்து, இப்ப நீங்க யாராவது நீர் வேணும்ன்னு நினைக்கிறீங்களா, பத்திரிக்கையாளர்கள் தமிழ்நாட்டுக்கு நீட் வேணும்ன்னு நினைக்கிறீங்களா, எல்லாருடைய கருத்து அதுதானே, அரசாங்கத்தினுடைய கருத்து, மக்களுடைய கருத்து, அதுதான் மாணவர்களுடைய கருத்து அதுதான் அப்ப அந்த கருத்துக்களை நாம முன்வைக்கும் போது இதுக்கு, அதுக்கு முடிச்சு போடுவது அவசியமாற்றது, தேவையற்றது அதனால் தமிழ்நாட்டினுடைய உரிமைகளை பொறுத்தவரைக்கும் கீழடியாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசு கல்விக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்க மறுத்தாலும் சரி, இன்னைக்கு நம்முடைய முதலமைச்சர் சுட்டிக்காட்டினாங்க ஒன்றிய அரசு வழங்கக்கூடிய திட்டங்களில் பெரும்பான்மையா மாநில அரசினுடைய நிதிகள் தான் கொடுக்குறாங்க, மாநில அரசு தான் அந்த திட்டங்களுக்கான நிதிகளை கொடுத்து திட்டங்களை செயல்படுத்தக்கூடிய சூழல் இருக்கு, நீங்க கேஸ்க்கு மானியம் கொடுக்குறாங்கன்னு, இப்ப யாருக்காவது கேஸ்க்கு மானியம் வருதா சொல்லுங்க, இருக்கிற பத்திரிக்கையாளர்கள் யாராவது ஒருத்தர் சொல்லுங்க பிஜேபி அரசு கேஸ் மானியம் எங்களுக்கு கொடுக்குறாங்கன்னு, இப்ப எங்க அக்கவுண்ட்ல எல்லாம் இந்த மாசம் வந்திருச்சா கேஸ் மானியம், ஆனா அப்படி இல்லை முதலமைச்சர் சொல்லக்கூடிய திட்டங்கள், அறிவித்த திட்டங்கள், நிதி ஒதுக்கிய திட்டங்கள் எது எல்லாம் கொடுத்தாங்களோ தொடர்ந்து கொடுத்துட்டு இருக்காங்க எந்த திட்டமா தமிழ்நாட்டுல முதலமைச்சர் தொடங்கி வைச்சு இந்த திட்டம் நின்னு போச்சு. இந்த மானியம் நின்னு போச்சுன்னு சொல்லி பாக்கலாம், மகளிர் உரிமைத் தொகை நாங்க போகின்ற இடங்களில் சில பேர் கோரிக்கை வைச்சாங்க, எங்களுக்கு விடுபட்டு இருக்கு சேர்த்துக்கணும் சொன்னாங்க அதையும் முதலமைச்சருடைய கவனத்துக்கு போன பிறகு அறிவிச்சுட்டாங்க, தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப் போறாங்க ஒட்டுமொத்தமா 10,000 முகாம்கள் நடக்குது யாரெல்லாம் வந்து அதிலே உரிமை தொகை விடுபட்டு இருக்கோ அவங்க, அங்க விண்ணப்பங்களை கொடுக்கலாம், தகுதி அடிப்படையில் அவங்களை தேர்வு செஞ்சு கொடுப்பாங்க,

உங்களை நாங்கள் சந்திப்பதற்கு காரணம் ஓரணியில் தமிழ்நாடு என்ற ஒரு சிறப்பான முன்னெடுப்பை முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அந்த பணிகளை நாங்கள் இன்றே தொடங்கி இருக்கின்றோம் நாளை பொதுக்கூட்டம் நாளை மறுநாள் உறுப்பினர் சேர்க்கைகள் நடைபெறும்,

தி.மு.க. ஆட்சியில் தமிழக உரிமைகள் பறிபோய் விட்டது, அதை மீட்பதற்காக ஜூலை 7 ஆம் தேதி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கோவையில் இருந்து அவருடைய சுற்றுப் பயணத்தை தொடங்குகிறார்,

ஒரு வேண்டுகோள் உங்க கிட்ட சொல்றேன், என்ன பறிபோச்சுன்னு நீங்க அவங்க கிட்ட கேட்டு சொல்லுங்க, இந்த நான்கு ஆண்டுகளில் ஆட்சி பொறுப்பேற்று தளபதி அவர்கள் முதலமைச்சராக அமர்ந்து தமிழ்நாட்டின் உரிமை என்ன பறிபோச்சுன்னு ஏதாவது ஒரு கருத்து, ஒன்னு நீங்களாவது கேட்கணும் அவங்ககிட்ட, சிறுவாணி அணையில் 50 அடி வரைக்கும் நீர் தேங்கிட்ருந்த அதிமுக ஆட்சியிலே, இப்ப திமுக ஆட்சியிலே 40 அடி தான் வந்தது என்று அவங்க சொல்றாங்க?

அதாவது வந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முழுமையா எடுத்திருக்கிறோம், அது சம்பந்தமா இருக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து அதில் நடந்துகிட்டு இருக்கு இங்க அதுல எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை ஏதோ அவங்க செஞ்சுட்டாங்க நாங்க செய்யலன்னு சொல்லி இப்ப இதுக்கு முன்னாடி கார்த்தி அண்ணன் பேசுனாங்க, இந்த அவினாசி ரோடு பாலப் பணிகள் 12% அவங்க முடிச்சிருந்தாங்க அவ்வளவு தான் செலவழிச்சிருந்தாங்க, மீதி 88% பணத்துக்கான நிதி, அந்த பாலத்துக்கான நிதிகளை நாங்க தான் கொடுத்திருக்கிறோம்,

நாங்க தான் அதை வேலையை முடிச்சிருக்கோம், அவங்க செஞ்சது எவ்வளவு என்று கேட்டா, நாங்க பாலம் கொண்டு வந்தேன்னு சொல்லுவாங்க, ஏதாவது ஒரு கருத்துக்கள், சொல்லக்கூடிய கருத்துக்கள் தேர்தல் நேரம்ங்கறதுனால ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொரு மாதிரியான கருத்துக்களையும் முன்வைப்பாங்க, அந்த கருத்துக்களை நீங்க ஒரு செய்தியா போடணும்ங்கறது உங்களுடைய கடமையா அதை நீங்க செய்றீங்கன்னு வச்சுக்கோங்க, பொதுவா நீங்க கோயம்புத்தூரை பொறுத்த வரைக்கும் இப்படி ஒரு பெரியார் நூலகம் இதுவரைக்கும் அமைச்சிருக்காங்க, படிக்கக்கூடிய, போட்டி தேர்வுக்கு தயாராகக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு அந்த இளைஞர், இளம் பெண்களுக்கு எவ்வளவு ஒரு வசதி வாய்ப்பா இருக்கும் ஏழு மாடி கட்டிடம், மிக பிரமாண்டமா இருக்கு, நகைத் தொழில் செய்றவங் என்னைக்காவது அவங்க வாழ்க்கையில நினைச்சு பார்த்திருப்பாங்களா, எத்தனை வருஷ கோரிக்கை, இங்கு இருக்கக்கூடிய பத்திரிக்கையாளர்கள் எத்தனை முறை அதை எழுதியிருப்பீங்க, அவங்களுக்கான ஒரு தொழில் கூடம் வேணும்ங்கிறது ஏறத்தாழ 126 கோடி நிதிகளை கொடுத்து அவங்களையே, அவங்க எல்லா சங்கங்களையும் அழைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமர்ந்து, அமைச்சரே உட்கார்ந்து அதை பேசி என்ன வடிவமைப்புகள் செய்யப்பட்டிருக்கு எதாவது மாற்றங்கள் இருந்தா நீங்க சொல்லுங்க அப்படின்னு சொல்லி அவங்ககிட்டயே கேட்டு அதற்கான திட்டமிடல் அதுல செய்யப் பட்டிருக்கு, இப்படி தொடர்ச்சியா ஒட்டுமொத்தமா நிறைய, வரிசையா சொல்லிக்கிட்டே இருக்கலாம், அதனால தமிழ்நாட்டினுடைய உரிமைகள் என்பது கடந்த காலங்களில் ஆதிமுக ஆட்சியில் பறிபோனதை இன்று நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் மீட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நீங்க ஒரு கருத்து, அவருடைய கருத்துதான் சொல்றேன் கொஞ்ச நாளைக்கு முன்னாடி சொன்னாரு 2024 எம்பி எலக்சன்லேயும் ஒருத்தரோட சேர மாட்டோம், 2026 லேயும் சேர மாட்டோம்ன்னு ஒரே ஆர்ப்பரிப்போட இருந்துச்சு செய்தி எல்லாம், அடுத்து எங்க போனாங்க, என்னன்னே தெரியல, பக்கத்துல போய் உட்கார்ந்தா கொஞ்சம் மிக்ஸர் வைத்திருந்தா சாப்பிட்டு உட்கார்ந்து இருப்பாங்க,

**எங்கள் கூட்டணி வலுவான கூட்டணி!**

எங்கள் கூட்டணி வலுவான கூட்டணி, எங்க தலைவர் மீது மக்கள் நம்பிக்கை வைச்சிருக்காங்க, தலைவருடைய திட்டங்களுக்கு வரவேற்பு கிடைச்சிருக்கு முதலமைச்சர் செல்லுமிடமெல்லாம் தாய்மார்கள், மகளிர் வந்து உற்சாக வரவேற்பு கொடுக்குறாங்க அடுத்த 2026 தேர்தலிலும் தளபதி தான் முதலமைச்சர் என்பதை உறுதி செய்றாங்க, இப்ப ஒரே ஒரு நோக்கம் நீங்க ஒவ்வொரு முறையும் வந்து சில பேர் எல்லாம் பேட்டியில கூட கொடுத்தாங்க பிஜேபி இங்க வந்தா பிரதமர் வந்து ஆங்கிலத்தில் தான் பேசுறாரு அதுவும் சோசியல் மீடியாவுல வந்துச்சு, அவர் வந்து எந்தெந்த கூட்டத்துல கலந்துக்கிட்டாரு, எது எதெல்லாம் ஹிந்திலே பேசுனாருன்னு அதெல்லாம் விட்டுறீங்க சோசியல் மீடியாவிலே, அதெல்லாம் வந்துச்சுல்ல, ஒரு கட்சியோட ஒரு நிர்வாகி பேசுனாரு அவர் வந்தா ஆங்கிலத்தில் தான்

பேசுறாரு வேறு எதிலும் பேசுறது இல்லைன்னு, அப்படியே கீழ பதிலை போட்டிருந்தாங்க அவர் ஹிந்தியிலே பேசுகிறார் என்று அப்படித்தானே வந்துச்சு,

நாடாளுமன்ற தேர்தல் அப்போதான் பாஜக வை எதிர்த்து திமுக அரசியல் செய்கிறது, சட்டமன்ற தேர்தலையும் அந்த யுக்தியை கையாளுமா?

பி.ஜே.பி. எதிர்த்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது, என்னெல்லாம் நம்முடைய உரிமைகள் இருக்கு, என்னெல்லாம் ஒன்றிய அரசு செய்யாமல் இருக்கு, நம்ம எதெல்லாம் இப்ப நம்ம கேட்டுக்கிட்டு இருக்கோம் என்னங்கறது தான் நம்முடைய கருத்து அதை சொல்லித்தான் ஆகவேண்டும் மக்கள் இடத்தில், இன்னைக்கு இருக்கக்கூடிய சூழல்கள் இளைஞர்கள், பெண்கள், மகளிருக்கு எல்லாம் தெரியணும்லே, நாட்டினுடைய நடப்பு தெரியணும்லே, விலாவரிய போய் சொல்லணும்லே, இரண்டு நாளைக்கு முன்னாடி ஒரு அரசியல் கட்சியோட தலைவர் கோயம்புத்தூர் வருகை தந்து சாலை எல்லாம் மோசமா இருக்கு ரோடே போடல அதெல்லாம் பார்க்கணும்ன்னு சொல்லி சொன்னாங்க, நான் பல முறை உங்களுக்கே சொல்லியிருக்கேன், பத்திரிக்கையாளர் சந்திப்பிலேயும் சொல்லியிருக்கிறோம் நிறைய சாலையில் ஆரம்பிக்கும் பொழுது கூட சொல்லி இருக்கின்றோம். இது வரைக்கும் கோவை மாநகராட்சியில் மட்டும் நான்காண்டுகளில் 1,364 கிலோ மீட்டர் நீலத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன, ரூபாய் 417 கோடிக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது, சிறப்பு நிதியில் 200 கோடி ரூபாய் ஒதுக்கி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, வரக்கூடியவர்கள் என்ன சொல்கிறார்கள் ரோடே போடல, எதுவுமே நடக்கல, எல்லாம் குண்டும், குழியுமாக இருக்கு பொதுவான கருத்துக்களை அப்படித்தான் சொல்கிறார்கள்.

பத்திரிக்கையாளர்கள் ஒரு கருத்தை மட்டும் நீங்க மனசுல பதிவு வச்சுக்கோங்க. யாரோ சொல்றாங்கன்னா அதை எடுத்துக்க வேண்டாம். ஒரு சாலையினுடைய ஆயுட்காலம் அஞ்சு வருஷம். ஒரு ரோடு போட்டா அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி அந்த ரோட்டை திரும்ப எடுக்க முடியாது. எடுத்தா ஆடிட்ல பிரச்னை வரும். ரோடே சாங்க்ஷன் பண்ண முடியாது. அப்ப கடந்த அதிமுக ஆட்சியிலே ரோடு போட்டிருந்தா இப்ப அஞ்சு வருஷத்துக்குள்ள அந்த ரோட்டை நாம எடுக்க முடியாது. இப்போ போன ஆட்சியில போடாத ரோடு எல்லாம் போடாம விட்டுட்டு போன ரோடு எல்லாம், நீங்க பெரும் வந்து கலர் கலரா திட்டங்களை சொல்றாங்கலே தவிர புதிய சாலைகள் அமைப்பதற்கோ, சாக்கடைகள் அமைப்பதற்கோ, பாத்தாள சாக்கடை திட்டத்திற்கான நிதிகள் எதுவும் கொடுக்கவில்லை, நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்து அந்த பணிகள் செய்யறாங்க. இதெல்லாம் ஒரே நாள்ல, ஒரே வாரத்துலே, ஒரே மாசத்துலே நடைபெறுவது அல்ல, அதனாலே இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பினுடைய நோக்கம் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை நம்முடைய உரிமைகளை முதலமைச்சர்கள் முன்னெடுத்து இருக்கக்கூடிய இந்த முன்னெடுப்புகளை தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைத்து குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் ஒருங்கிணைத்து முன்னெடுக்கக்கூடிய ஒரு மகத்தான முன்னெடுப்பு, இன்று தொடங்கி இருக்கக்கூடிய இந்த பயணம் 45 நாட்கள் தொடர்ந்து நடைபெற இருக்கின்றன, பூத் வாரியாக எங்கள் நிர்வாகிகள் உறுப்பினர்களை சேர்ப்பார்கள், ஓரணியில் தமிழ்நாடு அவர்களை ஒருங்கிணைக்க கூடிய பணியில் மிக சிறப்பாக செயல்படுவார்கள்.

**தேர்தலில் வெல்லப்போவது தி.மு.க.தான்!**

யார் யாரோடு சேர்ந்தாலும் தேர்தலில் வெல்லப்போவது திராவிட முன்னேற்ற கழகம், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவிக்கின்ற வேட்பாளர் தான் கோவையில் ஜெயிப்பார்கள், பொறுத்திருந்து பாருங்கள். இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்டை, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய எக்கு கோட்டை, இப்பொழுது தளபதி அவர்களின் கோட்டை நிச்சயமாக தேர்தல் களம் என்பது திராவிட முன்னேற்றக் கழகம் தான் வெற்றி பெறும் என்று பத்திரிக்கையாளர்களிடம் கூறினார். இதில் கோவை மாநகர மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர்

தளபதி முருகேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில்கள் சார்பில் சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில் 32 இணைகளுக்கான திருமண விழாவினை நடத்தி வைத்ததைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம் (02.07.2025) சேலம், சுகவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில் திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கான திருமண விழாவினை நடத்தி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், துணை மேயர் மா.சாரதாதேவி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சபர்மதி, அறங்காவலர்கள் குழுத்தலைவர் வள்ளியப்பா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறை**

க.து.ந.க.எண்.பி1 / 1530 / 2025

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Construction of Various types **Burial Grounds and Buildings at Zone - 4, 6, 11, 12, 13, 14 and 15. (Two Cover System) (7 சிப்பங்கள்)**

குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.55,02,025.14, அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.4,30,23,346.31

முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 21.07.2025 அன்று மதியம் 3.00 P.M மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 22.07.2025 அன்று முற்பகல் 11.00 A.M மணி

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 3383 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**


**தி.மு.க. மருத்துவ அணி**

**துணை அமைப்பாளர்கள் நியமனம்!**

மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளராக, **கே.எம்.எஸ். மந்திரி**, எம்.பி.பி.எஸ்., (904/1, அடப்பன் வயல் முதல் வீதி, புதுக்கோட்டை - 622 002.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18 நாள்- 01-07-2025.

டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., செயலாளர், தி.மு.க. மருத்துவ அணி

**தி.மு.க. சுற்றுச்சூழல் அணி**

**மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம்!**

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**தருமபுரி மேற்கு மாவட்டம்**

தருமபுரி மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட குபேந்திரனுக்கு பதிலாக **சு.ரூபன்** (பன்னிஅள்ளி (கி) கெண்டேனஅள்ளி அஞ்சல், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18 நாள்- 02-07-2025.

கார்த்திகேய சிவசேனாபதி, செயலாளர், தி.மு.க. சுற்றுச்சூழல் அணி



குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இளித்துரை கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கிளை நூலகத்தின் அடிப்படை வசதிகள் குறித்து அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் கிளை நூலகர் மலர்வண்ணன், ஊர் தலைவர் சேகர் உட்பட பொதுமக்கள் உடன் இருந்தனர்.




சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஆத்தூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார், தெற்கு நகர செயலாளர் ஜி.ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். நகர மன்ற தலைவர் நிர்மலா பபிதா மணிகண்டன், அலெக்சாண்டர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர். சிவலிங்கம், தலைமை கழக பேச்சாளர் கோவை சம்பத், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.